ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2310/45 - 2022 දෙසැම්බර් මස 16 වැනි සිකුරාදා - 2022.12.16

2310/45 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ATU/LND/04/DO 53.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/5/2019/HA/615.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மாத்தறை மாவட்டத்தில் அதுரலிய பிரதேச செயலாளர் பிரிவிலே பலகாவல கிராம அலுவலர் பிரிவில் பலகாவல எனும் கிராமத்திலமைந்துள்ள மாத்தறை நில அளவை மாஅதிபரின் இறுதி முற்படப் பிரதியிலே இல. 77 என விபரிக்கப்படும் கீழ்வரும் காணியின் எல்லைகளின் விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 984**

காணியின் பெயர்: கவரபொக்க எனும் கவரகொட ஹேன; காணியின் விபரம்: வீட்டுத் தோட்டம், கலப்புப் பயிர்ச்செய்கை உண்டு; உரிமை கோரு வோர்: பலகாவலயில் வசிக்கும் திரு. பீ. ஏ. எஸ். பாண்டிப்பெரும அவர்கள்; விஸ்தீரணம்: 0.0068 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 985**

காணியின் பெயர்: கல்கெடியவத்த எனும் பலகாவல சைத்தியாநந்த விகாரை எனும் பலகாவல சாநந்த விகாரை; காணியின் விபரம்: வீட்டுத் தோட்டம் மற்றும் அரச நிர்வாக அமைச்சினால் நிர்மானிக்கப் பட்ட நிரந்தரக் கட்டிடம் உண்டு; உரிமை கோருவோர்: சங்கைக்குரிய கொட்டபொல சீலரத்ன தேரர், விஹாராதிபதி, சாநந்த விகாரை, பலகாவல; விஸ்தீரணம்: 0.0219 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித்துண்டுகளுக்கு உரித்துப் பேசு கின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதுரலிய பிரதேச செயலகத்தில்

என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிரோசா எஸ். கமகே,
பிரதேச செயலாளர்,
அதுரலிய.

பிரதேச செயலகம்,
அதுரலிய.
2022, திசெம்பர் 13.

EOG 12 - 0175

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு
இல.: LD/05/2006/PC/349.
குறிப்பு இல.: DSWA/LND/4/ACQUI/FI/28.

2021.01.08 ஆந் திகதிய 2209/77 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் 1A பக்கத்தில் பிரசுரிக்கப் பட்ட தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், வலஸ்முல்ல பிரதேச செயலாளர் பிரிவில், அகலபட கிராம அலுவலர் பிரிவில், இ.கி.வ. 155 இல் அமைந்துள்ள காணி எடுத்துக்கொள்ளல் தொடர்பாக வெளியிடப்பட்ட விளம்பரம் இரத்துச் செய்யப்படு கிறது. மேலும் நட்டஈட்டு விசாரணை இடம், திகதி மற்றும் நேரம் வலஸ்முல்ல பிரதேச செயலகத்தில் 2023.03.20 ஆந் திகதி மு.ப. 10.30 என திருத்தப்படு கின்றன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ஐ. ஆர். கே. விதாரண,
பிரதேச செயலாளர்,
வலஸ்முல்ல.

பிரதேச செயலகம்,
வலஸ்முல்ல.
2022, திசெம்பர் 05.

EOG 12 - 0176

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: LA/1783.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/17/2021/D/පොදු/iv.

2022.10.26 ஆந் திகதிய 2303/15 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் (அதி விசேடமானது) 30ஏ ஆம் பக்கத்தில்,

"மேற்குறித்த காணித்துண்டுகளுக்கு உரித்துப் பேசு கின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24, 25 ஆந் திகதிகளுக்கு மு.ப. 10.00 மணிக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத் தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 17, 18 ஆந் திகதிகளுக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்". எனக் குறித்திருந்தது.

"மேற்குறித்த காணித்துண்டுகளுக்கு உரித்துப் பேசு கின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு தை மாதம் 25, 26 ஆந் திகதிகளுக்கு மு.ப. 10.00 மணிக்கு வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக் குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு தை மாதம் 18, 19 ஆந் திகதிகளுக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்". எனத் திருத்தப்பட வேண்டும்.

ச. சிவஸ்ரீ,
பிரதேச செயலாளர்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை.

பிரதேச செயலகம்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை.
2022, திசெம்பர் 05.

EOG 12 - 0177

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: TN/DS/LA/ACQ/AY/2019/01.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/10/2018/D/403.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

| | | |
|---|---|---|
| ஆரம்ப வரைபட இல. | : | பிபியா 3007 |
| இட அமைவு கிராமம் | : | கொடிகாமம் வடக்கு |
| கிராம அலுவலர் பிரிவு | : | கொடிகாமம் வடக்கு J/326 |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | தென்மராட்சி |
| மாவட்டம் | : | யாழ்ப்பாணம் |
| மாகாணம் | : | வடக்கு |

01. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: வேவிற்காடு; காணியின் விபரம்: தற்காலிகக் கட்டடம் மற்றும் தோட்டம்; உரிமை கோருவோர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0148 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 02**

காணியின் பெயர்: வேவிற்காடும் வேவிற் தோட்டமும்; காணியின் விபரம்: இரு தற்காலிகக் கட்டடம் மற்றும் தோட்டம்; உரிமை கோருவோர்: சின்னத்துரை யர்சலீன்; விஸ்தீரணம்: 0.2553 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித்துண்டுகளுக்கு உரித்துப் பேசு கின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சு. உஷா,
பிரதேச செயலாளர்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி.
2022, திசெம்பர்

EOG 12 - 0182